2014 ஜனவரி 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சசப்பன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

3—

வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள்

***5735—திரு. ந. நஞ்சசப்பன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலமாகக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் குடியிருப்புகள் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சசப்பன் அவர்கள்.*

திரு. ந. நஞ்சசப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், 3 பேரூராட்சிகளை உள்ளடக்கிய ஒரு ஒன்றியம். மாவட்டத்திலேயே வீட்டு வசதி வாரியத்தின்மூலமாக வீடுகள் கட்டப்படாத ஒரே வட்டம் பெண்ணாகரம் வட்டம்தான். பல்வேறு அரசுத் துறை அலுவலர்கள்கூட அங்கே தங்குவதற்கு வாய்ப்பில்லாமல், தருமபுரியை நோக்கிச் செல்கிறார்கள். எனவே, இவற்றையெல்லாம் அரசு கவனத்திலேகொண்டு, மறுபரிசீலனை செய்து, அதை நிறைவேற்றிட ஆவன செய்யுமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

[2014 ஜனவரி 31

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலர்களுக்கான வாடகைக் குடியிருப்புகள் மாவட்டத் தலைமையிடம் மற்றும் வருவாய்க் கோட்டத் தலைமையிடங்களில்தான் கட்டப்பட்டிருக்கின்றன. பெண்ணாகரம் வட்டாட்சியர் தலைமையிடம் ஆகும். தமிழ்நாட்டில் வட்டாட்சியர் தலைமையிடங்களில் வீட்டு வசதி வாரியத்தின்மூலமாகக் குடியிருப்புகள் கட்டப்படவில்லை. மேலும், பெண்ணாகரத்தில் 350 அரசு அலுவலர்கள்தான் பணிபுரிகிறார்கள். தருமபுரியில் கட்டப்பட்ட அரசு அலுவலர்களுக்கான வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளே காலியாக இருக்கின்றன. பெரும்பாலும், அரசு ஊழியர்கள் மாவட்டத் தலைநகரங்களில் இருக்கவே விரும்புகிறார்கள். அதனால் பெண்ணாகரத்தில் அக்குடியிருப்புகள் கட்டக்கூடிய வாய்ப்பு இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.*

திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் பின்தங்கிய பகுதி என்பதை அரசு நன்கு அறியும்; மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நன்கு அறிவார்கள். சாதாரண மக்கள் குடியிருப்பதற்குக்கூட அங்கு குடியிருப்புகள் கட்டப்படவில்லை. அனைத்து வட்டங்களிலும் கட்டப்பட்ட நிலையில், பெண்ணாகரம் மட்டும் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்ற குறைபாட்டினைப் போக்கிடும் வகையில், அதைக் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.*

2014 ஜனவரி 31]

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட கூடலூர் வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் மிகவும் பழுதடைந்துள்ளன என்றும், அங்கு அரசு ஊழியர்கள் குடியிருக்க முடியாத சூழ்நிலை உள்ளது என்றும், கடந்த கூட்டத் தொடரிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். அமைச்சர் அவர்களும் அதை சரிசெய்து கொடுப்போம் என்று உறுதியளித்தார். ஆனால், இதுநாள் வரையில் எந்தப் பணிகளும் தொடங்கப்படவில்லை. இனிமேலாவது அந்தப் பணிகளைச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விழைகின்றேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளைப் பழுதுபார்க்கும் பணிக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசில் 40 கோடி ரூபாய்க்கும் மேல் இந்த ஆண்டு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று இந்த ஆண்டே அக்கட்டடங்களில் பழுது நீக்கம் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்திற்கு அருகில் அரசு ஊழியர்களுக்காக கட்டப்பட்ட 742 Flats அடங்கிய வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான கட்டடங்கள் தற்போது பழுதடைந்து, ஐந்து வருடங்களாக பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன. எனவே, இவற்றை இடித்துவிட்டு புதிய கட்டடங்கள் கட்டித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

[2014 ஜனவரி 31

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய யோசனையை ஆய்வு செய்து, வாய்ப்புகள் இருப்பின் நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

4—

பட்டு நூற்பு நிலையம்

***14352—திரு. ர.ம. பாபு முருகவேல்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணியில் பட்டு நூற்பு நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி உட்பட தமிழகத்தில் பட்டு நூற்பு விரிவாக்கம் செய்ய வாய்ப்புள்ள அனைத்துப் பகுதிகளிலும் தனியார் பட்டு நூற்பு நிலையங்கள் துவக்கி செயல்படுத்திட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதிக்குட்பட்ட சேடப்பட்டி பகுதியில் ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொழிற்பேட்டைகள் அமைப்பதற்கான நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் தொழிற்பேட்டை*